
நித்ரா®

## Elevate your communication skill through

# CONVERSATIONS



## ஆங்கிலம் மற்றும் தமிழில்..

www.nithrabooks.com | books@nithra.mobi | Cell: 98659 24040

Copyright is reserved to the publisher, therefore the person who will try to imitate or try to print this book illegally or without the prior written permission of this publisher in any form, will be responsible for the loss and may be punished  for compensation under copyright act.

இந்தப் புத்தகத்தைப் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி
மறுபதிப்பு செய்வதோ, அச்சேற்றுவதோ, நகல் எடுப்பதோ
கூடாது. மீறினால் காப்பிரைட் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

நூலின் பெயர் : **Elevate your communication skill through conversations**

பக்கங்கள் : 400

விலை : ரூ. 200

பதிப்பு : 2020

உரிமை : பதிப்பகத்தாருக்கே

In the compilation of this book all possible precautions have been taken to ensure that the informations provided is correct. Yet the publisher / authors will nto be held responsible for any printing errors or damage resulting from any inadvertent omission or inaccuracies in this book. However suggestions for the improvement of this book (Including printing errors, ommissions, etc. if any) are welcome and these will be incorporated in the subsequent editions of this book.

---

Published by : **P. Gokulanathan, Nithra Publications,** AV Plaza 3rd & 4th Floor, South Car Street, Tiruchengode - 637211.

## (01)Conversation between Mother and Daughter about New School!!

### (புதிய பள்ளியைப் பற்றி தாயும் மகளும் பேசிக் கொள்வது..!)

**Mother:** How's your new school, Lavanya?
**அம்மா:** உன்னுடைய புதிய பள்ளி எப்படி இருக்கிறது லாவண்யா?

**Lavanya:** Oh.. It's fine. I like it very much. Now I've a lot of new friends. Shivani, Rubini, Balaji,.. and..
**லாவண்யா:** ஒ, அருமையாக உள்ளது. எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது. இப்போது எனக்கு நிறைய புதிய நண்பர்கள் உள்ளனர். சிவானி, ரூபினி, பாலாஜி அப்புறம் ..

**Mother:** And your new teacher?
**அம்மா:** உன்னுடைய புதிய ஆசிரியர்?

**Lavanya:** Yes, He's very kind. He sings and plays the piano beautifully.
**லாவண்யா:** ஆம். அவர் மிகவும் அன்பாக இருக்கிறார். அவர் நன்கு பாடுகிறார் மற்றும் பியானோவை அழகாக வாசிக்கிறார்.

**Mother:** Oh.. Then you all like him very much.
**அம்மா:** அப்படியென்றால் உங்கள் அனைவருக்கும் அவரை மிகவும் பிடிக்குமா?

**Lavanya:** Yes, everyone likes him.
**லாவண்யா:** ஆம், எல்லோருக்கும் அவரை பிடிக்கும்.

**Mother:** Did you get your new books?
**அம்மா:** புதிய புத்தங்கள் எல்லாம் உனக்கு கிடைத்துவிட்டதா?

**Lavanya:** Yes, I got them. They are very interesting with a lot of colour pictures.
**லாவண்யா:** ஆம். எனக்கு அவை கிடைத்துவிட்டது. அவை நிறைய வர்ணப்படங்களுடன் மிகுந்த ஆர்வத்தைத் தூண்டும் வகையில் உள்ளன.

**Mother:** Then I'm sure you're going to enjoy your lessons.
**அம்மா:** அப்படியென்றால் நீ உன் பாடங்களை மிகவும் ரசிப்பாய் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

**Lavanya:** Of course, I will enjoy.
**லாவண்யா:** கண்டிப்பாக, நான் நன்கு ரசிப்பேன்.

**Mother:** You are tired and hungry, Lavanya. Come, let's have lunch.
**அம்மா:** லாவண்யா நீ மிகவும் சோர்வாகவும் பசியோடும் இருப்பாய். வா நாம் சேர்ந்து மதிய உணவு சாப்பிடுவோம்.

**Lavanya:** Yes, mom.. Very hungry, come on.
**லாவண்யா:** ஆமாம் அம்மா. மிகவும் பசியாக உள்ளது, வாருங்கள்.

-----------------------------------------------------------------------------------

## (02)Conversation about Higher Studies between Father and Son!!
## மேல்படிப்பைப் பற்றி தந்தை மற்றும் மகனுக்கிடையேயான உரையாடல்!!

**Father:** I think your exam is very near.
**தந்தை:** உன் தேர்வு மிக அருகில் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

**Son:** Yes dad. And I am ready for that.
**மகன்:** ஆமாம் அப்பா. அதற்காக நான் தயாராக இருக்கிறேன்.

**Father:** Did you finish reading everything?
**தந்தை:** நீ எல்லாவற்றையும் படித்து முடித்து விட்டாயா?

**Son:** Yes, I have already revised my book several times.
**மகன்:** ஆமாம், நான் ஏற்கனவே என் புத்தகத்தை பலமுறை திரும்ப படித்துவிட்டேன்.

**Father:** So which rank do you expect ?
**தந்தை:** நீ எந்த தரவரிசையை எதிர்ப்பார்க்கிறாய்?

**Son:** I hope that I will get first place. In the model exam, I got first place and secured the highest marks in our school.
**மகன்:** நான் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுவேன் என்று நம்புகிறேன். மாதிரி தேர்வில் நான் அதிக மதிப்பெண்களைப் பெற்று எங்கள் பள்ளியில் முதலிடம் பிடித்துள்ளேன்.

**Father:** Fine, I expect you will score good marks in the HSC examination.
**தந்தை:** நல்லது, நீ HSC தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவாய் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**Son:** If everything goes fine, then I will fulfill your expectation.
**மகன்:** எல்லாம் நன்றாக நடந்தால், நான் உங்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவேன்.

**Father:** This exam is very crucial because your higher study will depends on this result. If you didn't study well in HSC, then you may not get chance for higher study in a reputed university.
**தந்தை:** இந்த தேர்வு தான் உன்னுடைய மேல் படிப்பை முடிவு செய்யும் என்பதால் இந்த பரிட்சை மிகவும் முக்கியமானது. நீ HSC-யில் சரியாக படிக்காவிட்டால், புகழ் பெற்ற பல்கலைக்கழகத்தில் மேல் படிப்புக்கான வாய்ப்பைப் பெற முடியாமல் போய்விடும்.

**Son:** That's true and I am serious in my studies.
**மகன்:** அது உண்மைதான், என்னுடைய படிப்பில் நான் தீவிரமாக இருக்கிறேன்.

**Father:** Another thing that your career will depend on the area of your higher study. So this result will actually determine your career as well.
**தந்தை:** உனது வாழ்க்கை உன்னுடைய மேல் படிப்பு துறையை சார்ந்து இருக்கும் என்பது மற்றொரு விஷயம். எனவே இந்த முடிவுதான் உண்மையில் உன் வாழ்க்கையை தீர்மானிக்கும்.

**Son:** Oh really?
**மகன்:** அப்படியா?

**Father:** So do your best, my son.
**தந்தை:** அதனால் உன்னால் முடிந்தவரை சிறப்பாக செய், என் மகனே.

**Son:** Don't worry, dad. I am fully prepared.
**மகன்:** கவலைப்படாதீர்கள் அப்பா. நான் முழுமையாக தயாராக இருக்கிறேன்.

**Father:** Now it's too late, so go and sleep. Let me know if you need anything. Good night.

**தந்தை:** இப்போது மிகவும் தாமதமாகி விட்டது, அதனால் போய் தூங்கு. உனக்கு ஏதேனும் தேவை என்றால் எனக்கு தெரியப்படுத்து. இரவு வணக்கம்.

**Son:** Good night.

**மகன்:** இரவு வணக்கம்.

---------------------------------------------------------------------------------------

## (03)Conversation between Father and Daughter
## தந்தை மற்றும் மகளுக்கு இடையேயான உரையாடல்

**Father:** I received progress report of your examination.

**அப்பா:** உன்னுடைய தேர்ச்சி அறிக்கை எனக்கு கிடைத்துள்ளது.

**Daughter:** Have I passed all the subjects?

**மகள்:** எல்லா பாடங்களிலும் நான் தேர்ச்சி பெற்று விட்டேனா?

**Father:** You have failed in Science subjects especially Physics and Chemistry.

**அப்பா:** அறிவியல் பாடங்களில் குறிப்பாக இயற்பியல் மற்றும் வேதியியல் பாடங்களில் நீ தோல்வியடைந்துள்ளாய்.

**Daughter:** My all teachers are not in my favour.

**மகள்:** என் ஆசிரியர்கள் அனைவரும் எனக்கு ஆதரவாக இல்லை.

**Father:** Do not blame them. Teachers taught you very well. Your report shows that your are very lazy and careless. What was the reason of your bad marks?

**அப்பா:** அவர்களை குற்றம் சொல்லாதே. அவர்கள் உனக்கு நன்றாக கற்பித்துள்ளனர். உன்னுடைய அறிக்கை நீ மிகவும் சோம்பேறியாகவும், கவனமற்றவளாகவும் இருப்பதைக் காட்டுகிறது. உன்னுடைய மோசமான மதிப்பெண்ணிற்கு என்ன காரணம்?

**Daughter:** I became upset when I read the questions in the exam. Because I did not study those questions.

**மகள்:** நான் தேர்வுகளில் கேள்விகளை படிக்கும்போது வருந்தினேன். ஏனென்றால் நான் அந்த கேள்விகளை படிக்கவில்லை.

**Father:** You should be ashamed of yourself. You have disappointed me.
**அப்பா:** இதற்கு நீ வெட்கப்பட வேண்டும். நீ என்னை ஏமாற்றமடையச் செய்துவிட்டாய்.

**Daughter:** I am sorry. I promise you to study from today. My next progress report would be excellent Dad.
**மகள்:** இதற்காக நான் வருந்துகிறேன், இன்றிலிருந்து நான் நன்றாக படிப்பேன் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன். என்னுடைய அடுத்த அறிக்கை சிறப்பாக இருக்கும் அப்பா.

**Father:** Promise?
**அப்பா:** உறுதியாகவா?

**Daughter:** Yes Dad.
**மகள்:** ஆம் அப்பா.

**Father:** Ok, Study well and get good marks in your next exam.
**அப்பா:** சரி, நன்றாக படித்து உன்னுடைய அடுத்த தேர்வில் நல்ல மதிப்பெண்களை பெற வேண்டும்.

------------------------------------------------------------------------------------

## (04)Conversation between Father, Mother, Brother and Sister!!

### தந்தை, தாய், சகோதரர், சகோதரி இடையேயான உரையாடல்!!

**Father:** I've just received a letter from Arun.
**தந்தை:** இப்போது தான் அருணிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

**Mother:** What does he say? Has he found a new place to stay?
**தாய்:** அவன் என்ன எழுதியிருக்கிறான்? அவன் தங்குவதற்கு புதிய இடம் கிடைத்து விட்டதா?

**Father:** Yes. He has. It's in Besant Nagar.
**தந்தை:** ஆம் கிடைத்து விட்டது. அது பெசன்ட் நகரில் இருக்கிறது.

**Brother:** Is it a nice place?
**சகோதரர்:** அது நல்ல இடமா?

**Father:** I think so. He says it's a large building with three floors. He lives in the flat on the first floor.
**தந்தை:** நான் அப்படித் தான் நினைக்கிறேன். மூன்று மாடிகளுள்ள பெரிய கட்டிடம் என்று எழுதியிருக்கிறான். முதல் மாடியில் உள்ள ஒரு ஃப்ளாட்டில் தங்கி இருக்கிறான்.

**Brother:** A flat?
**சகோதரர்:** ஒரு ஃப்ளாட்டா?

**Father:** Yes. It has a bed room, a hall, a kitchen and a washroom.
**தந்தை:** ஆம் அதில் ஒரு படுக்கை அறை, முகப்பு அறை, அடுப்பறை மற்றும் குளியலறை இருக்கின்றன.

**Brother:** Is there a garden?
**சகோதரர்:** அங்கு தோட்டம் உள்ளதா?

**Father:** No. He says the whole building is in a small plot.
**தந்தை:** இல்லை. அம்முழு கட்டிடமும் ஒரு மனையில் இருக்கிறது என்று எழுதியுள்ளான்.

**Sister:** Poor Arun! He'll miss many things.
**சகோதரி:** பாவம் அருண்! பல விஷியங்களை இழக்க நேரிடும்.

**Brother:** Yes. He'll miss his gardening, long walks and picking fruits. He'll be missing you too.
**சகோதரர்:** ஆம். அவன் தோட்ட வேலைகள், நீண்ட நடப்பயணங்கள், பழங்களை பறித்தல்போன்ற விஷியங்களை இழக்க நேரிடும். மேலும், அவன் உங்கள் பிரிவால் வாடுவான்.

**Sister:** Of course, He'll miss bathing in the river...a thing that he enjoy the most.

**சகோதரி:** நிச்சயமாக, அவன் ஆற்றில் குளிப்பதை இழப்பான் ... அது அவன் மிகவும் ரசிக்கும் ஒரு விஷயம்.

**Mother:** Whether he will be happy in his flat?

**தாய்:** அவனுடைய பிளாட்டில் அவன் மகிழ்ச்சியாக இருப்பானா?

**Father:** Why not? It has many other facilities. It has water on the tap; electricity and everything you need.

**தந்தை:** ஏன் முடியாது? அங்கு நிறைய வசதிகள் உண்டு. குழாயைத் திறந்தவுடன் தண்ணீர், மின்சாரம், வேறு பல வசதிகளும் அங்கே இருக்கின்றன.

**Brother:** You're right. It must be quite modern.

**சகோதரர்:** நீங்கள் சொல்லுவது சரி. அங்கு முற்றிலும் நவீன மயமானதாக இருக்கும்.

------------------------------------------------------------------------------------

## (05)Conversation between Father and Son...!!
## தந்தை மற்றும் மகனுக்கு இடையேயான உரையாடல்...!!

**Ravi:** I have a request to you.

**ரவி:** உங்களிடம் எனக்கு ஒரு வேண்டுகோள் இருக்கிறது.

**Father:** Please Tell me.

**தந்தை:** தயவுச் செய்து கூறு.

**Ravi:** My school members is going on a picnic to Kodaikanal.

**ரவி:** என்னுடைய பள்ளி மாணவர்கள் கொடைக்கானலுக்கு சுற்றுலா செல்கிறர்ரகள்.

**Father:** Ohh, Ok.

**தந்தை:** ஓ, சரி.

**Ravi:** I also want to go along with my class friends.

**ரவி:** நானும் என் வகுப்பிலுள்ள நண்பர்களுடன் செல்ல வேண்டும்.

**Father:** Who are all going to picnic?
**தந்தை:** யாரெல்லாம் சுற்றுலாவிற்கு செல்கிறார்கள்?

**Ravi:** Kadhir, Soundar, Sathish are going on picnic.
**ரவி:** கதிர், சௌந்தர், சதீஷ் ஆகியோர் சுற்றுலா செல்கிறார்கள்.

**Father:** For how many days you are all going to Kodaikanal?
**தந்தை:** எத்தனை நாட்களுக்கு நீங்கள் கொடைக்கானலுக்கு செல்கிறீர்கள்?

**Ravi:** Only for one week.
**ரவி:** ஒரு வாரத்திற்கு மட்டுமே.

**Father:** When they are going to picnic?
**தந்தை:** எப்போது அவர்கள் சுற்றுலாவிற்கு செல்கிறார்கள்?

**Ravi:** Tomorrow night.
**ரவி:** நாளை இரவு.

**Father:** Ok you may go. How much money you want?
**தந்தை:** சரி நீயும் போகலாம். உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?

**Ravi:** One thousand rupees only.
**ரவி:** ஆயிரம் ரூபாய் மட்டுமே.

**Father:** Alright take this money. Keep mobile with you. Notify me when you reach there.
**தந்தை:** சரி இந்த பணத்தை எடுத்துக் கொள். உனது கைபேசியை உன்னுடன் வைத்துக்கொள். அங்கு சென்றதும் எனக்கு தெரிவி.

**Ravi:** Mom! It is great pleasure, Father has allowed me to go for picnic. Please pack my bag with dresses. Mom, please give me your camera for taking photos.
**ரவி:** அம்மா! இது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது, நான் சுற்றுலா செல்ல அப்பா எனக்கு அனுமதி அளித்து விட்டார். தயவு செய்து எனது ஆடைகளை என் பையில் எடுத்து வைக்கவும். அம்மா, புகைப்படம் எடுக்க எனக்கு உங்களுடைய புகைப்படக் கருவியை கொடுங்கள்.

**Father:** Keep camera safely.
**தந்தை:** புகைப்படக் கருவியை பத்திரமாக வைத்துக் கொள்.

**Ravi:** Sure, Thanks.
**ரவி:** கண்டிப்பாக, நன்றி.

---

## (06)Conversation between Husband and Wife about Marriage!!

### திருமணம் பற்றி கணவன் மற்றும் மனைவி இருவரும் பேசிக் கொள்வது!!

**Wife:** Isn't Malathi a beautiful girl?
**மனைவி:** மாலதி ஒரு அழகான பெண் இல்லையா?

**Husband:** Why? she's quite beautiful. She is medium built, fair and of average height.
**கணவன்:** ஏன்? அவள் மிகவும் அழகானவள்தான். அவள் நடுத்தர உடல் அளவுடனும் சிவப்பாகவும் சராசரி உயரத்துடனும் இருக்கிறாள்.

**Wife:** Do you think she's a good match for Pradeep?
**மனைவி:** அவள் பிரதீப்புக்கு சரியான துணை என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**Husband:** I think she's perfect. Besides her beauty, she had a good education and she hails from a good family. What else do you want?
**கணவன்:** அவள் சரியானவள் என்று நினைக்கிறேன். அவளது சுமாரான அழகைத் தவிர அவள் நன்கு படித்தவள். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள். வேறு என்ன வேண்டும் உனக்கு?

**Wife:** Will Pradeep agree to marry this girl?
**மனைவி:** இந்தப் பெண்ணை திருமணம் செய்துகொள்ள பிரதீப் ஒப்புக்கொள்வானா?

**Husband:** That I don't know, but I find no reasons why he should reject or disagree.
**கணவன்:** அது எனக்குத் தெரியாது. அவன் நிராகரிப்பதற்கும் மறுப்பதற்கும் எந்த காரணமும் இருப்பது போல் எனக்கு தெரியவில்லை.

**Wife:** Then why don't you persuade him?
**மனைவி:** அப்புறம், ஏன் அவனை நீங்கள் சம்மதிக்க வைக்க கூடாது?

**Husband:** Certainly. I will. He's very particular that his life partner should have a good education and he prefers a working girl.
**கணவன்:** நிச்சயமாக. நான் சம்மதிக்க வைப்பேன். அவன் அவளது துணைவி நன்கு படித்தவளாகவும் வேலை செய்பவளாகவும் இருக்கவேண்டுமென முனைப்புடன் இருக்கிறான்.

**Wife:** Are you sure Pradeep will say 'yes'?
**மனைவி:** பிரதீப் 'ஆம்' என்று சொல்வான் என உறுதியாக நம்புகிறீர்களா?

**Husband:** I'm not an astrologer. We have to wait for Pradeep's words.
**கணவன்:** நான் ஜோதிடன் அல்ல. நாம் பிரதீப்பின் வார்த்தைகளுக்காக காத்திருக்க வேண்டும்.

**Wife:** I believe that Malathi will be a good wife for him.
**மனைவி:** மாலதி அவனுக்கு ஒரு நல்ல மனைவியாக இருப்பாள் என்று நான் நம்புகிறேன்.

**Husband:** Why do you focus only on Pradeep's consent for this alliance?
**கணவன்:** இந்த கல்யாணத்திற்கு பிரதீப்பின் சம்மதத்திற்கே ஏன் முக்கியத்துவம் அளிக்கிறாய்?

**Wife:** Have you ever thought what Malathi would say about your son Pradeep?
**மனைவி:** உங்கள் மகனைப் பற்றி மாலதி என்ன சொல்வாள் என்று எப்போதாவது நினைத்ததுண்டா?

**Husband:** No, I have no idea.
**கணவன்:** இல்லை எனக்கு எந்த யோசனையும் இல்லை.

**Wife:** Ok leave it, God will take care of it.
**மனைவி:** சரி விடுங்கள், கடவுள் அதை பார்த்துக் கொள்வார்.

## (07)Conversation at the Dining Table!
## சாப்பாட்டு மேஜையில் உரையாடல்!

**Karun:** I enjoyed your lunch very much. I really like rice and curry.
**கருண்:** நான் உங்கள் மதிய உணவை நன்கு ரசித்தேன். சாதமும் குழம்பும் எனக்கு உண்மையில் பிடிக்கும்.

**Vijay:** Are you sure the curry wasn't too hot, Karun?
**விஜய்:** குழம்பு மிகவும் சூடாக இல்லையே, கருண்?

**Karun:** No, It was quite hot, but it wasn't too hot. I wouldn't mind a cold drink though.
**கருண்:** இல்லை. அது சூடாக இருந்தது, ஆனால் மிகவும் சூடாக இல்லை. இருந்தாலும் குளிர்பானம் சாப்பிடுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

**Vijay:** But I'm not sure a cold drink is the best thing if you found the curry a little hot for you. It'll probably make you hotter and even give you cough.
**விஜய்:** குழம்பு கொஞ்சம் சூடாக இருந்தது என்றால் உனக்கு குளிர்பானம் சிறந்ததாக இருக்குமா என்று எனக்கு சந்தேகமாக உள்ளது. அது உன் உடலை மேலும் சூடாக்குவதுடன் உனக்கு இருமலையும் உண்டாக்கும்.

**Karun:** Yes. I think you are right.
**கருண்:** ஆம். நீ சொல்வது சரி.

**Vijay:** Can I offer you some fruit instead?
**விஜய்:** நான் அதற்கு பதிலாக உனக்குக் கொஞ்சம் பழங்கள் தரட்டுமா?

**Karun:** It’s a good idea!
**கருண்:** இது ஒரு நல்ல யோசனை!

**Vijay:** Why not have a slice of pineapple! They are very sweet and juicy. Shall I cut you a slice?
**விஜய்:** ஏன் ஒரு அன்னாச்சி துண்டை எடுத்துக்கொள்ளக் கூடாது! அவை மிகவும் இனிப்பாகவும் சாறு உள்ளதாகவும் இருக்கும். உனக்கு ஒரு துண்டு வெட்டட்டுமா?

**Karun:** Yes, Please. It looks very nice.
**கருண்:** ஆம் தயவு செய்து தாருங்கள். அது பார்ப்பதற்கு நன்றாக உள்ளது.

---

## (08)Conversation between Abi and her Mother!!
## அபி மற்றும் அவரது தாய் இடையே உரையாடல்!!

**Abi:** Hi, Mom.
**அபி:** வணக்கம் அம்மா.

**Mother:** How was your day today? How did you done your exam?
**அம்மா:** இன்றைய நாள் உனக்கு எப்படி இருந்தது? நீ எப்படி தேர்வு எழுதினாய்?

**Abi:** It was good day and I did great on the exam.
**அபி:** இன்றைய நாள் ஒரு நல்ல நாளாக இருந்தது, நான் நன்றாக தேர்வு எழுதியுள்ளேன்.

**Mother:** I am glad to hear that. You have been studying so hard the past few weeks. Now, you can take rest.
**அம்மா:** இதை கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. கடந்த சில வாரங்களாக நீ கடினமாக படித்து வருகிறாய். இப்போது, நீ ஓய்வெடு.

**Abi:** What do you cook today? It smells so good.
**அபி:** இன்று நீங்கள் என்ன சமைக்கிறீர்கள்? வாசனை மிகவும் நன்றாக இருக்கிறது.

**Mother:** I am doing laddu.
**அம்மா:** நான் லட்டு செய்கிறேன்.

**Abi:** Its really yummy. Shall I take an another laddu?
**அபி:** உண்மையில் இது மிகவும் சுவையாக இருக்கிறது. நான் இன்னொரு லட்டை எடுத்துக் கொள்ளலாமா?

**Mother:** OK, take it.
**அம்மா:** சரி, எடுத்துக்கொள்.